நேரம் 01



www.ikdu.lk

வாணி கல்வியகம்

S.Sarathbabu (Dip.in.teach) 077-1455654

உள்ளடக்கம்

- சில பொதுவான விடயங்கள்
- நேரத்தை வாசிக்கும் முறை
- நேரத்தை கூறும் மற்றுமொரு முறை
- முற்பகல் பிற்பகல்
- 24 கடிகாரத்தில் நேரத்தை வாசித்தல்
- பயிற்சிகள்

www.lkedu.lk

வாணி கல்வியகம்

S.Sarathbabu (Dip.in.teach) 077-1455654

சில பொதுவான விடயங்கள்



கடிகாரம் முகத்தில் உள்ள
முட்களின் பெயர்கள்

செக்கன் முன்

நிமிட முள்

மணித்தியாலம் முள்

www.ilkedu.lk

வாணி கல்வியகம்

S.Sarathbabu (Dip.in.teach) 077-1455654

சில பொதுவான விடயங்கள்

- 60 செக்கன்கள் ஒரு நிமிடம்
- 60 நிமிடங்கள் ஒரு மணித்தியாலம்
- இருபத்து நான்கு மணித்தியாலங்கள் ஒரு நாள்
- ஏழு நாட்கள் ஒரு வாரம்
- 4 வாரங்கள் ஒரு மாதம்
- 12 மாதங்கள் ஒரு வருடம்

www.lkedu.lk

வாணி கல்வியகம்

S.Sarathbabu (Dip.in.teach) 077-1455654

நேரத்தை வாசிப்போம்

உதாரணம்



ஒரு மணி கடந்து இருபது நிமிடங்களாகும்.

1.20

www.lkedu.lk

வாணி கல்வியகம்

S.Sarathbabu (Dip.in.teach) 077-1455654

(1)



இரண்டு மணி கடந்து முப்பது நிமிடங்கள்.

(2)



நான்கு மணி கடந்து நாற்பது நிமிடங்கள்.

www.lkedu.lk

வாணி கல்வியகம்

(3)



பதினொறு மணி

(4)



ஒன்பது மணி கடந்து நாற்பத்தைந்து நிமிடங்கள்.

www.lkedu.lk

வாணி கல்வியகம்

(5)



ஏழு மணி கடந்து பத்து நிமிடங்கள்.

(6)



பன்னிரண்டு மணி கடந்து இருபத்தைந்து நிமிடங்கள்.

www.lkedu.lk

வாணி கல்வியகம்

நேரத்தை இரு முறைகளில் வாசிக்கலாம்

உதாரணம்




கடிகாரத்தில் காட்டப்பட்டுள்ள நேரத்தை வாசிப்போம்.

- ஒன்பது கடந்து ஐம்பத்தைந்து நிமிடங்களாகும்.
- பத்து மணிக்கு ஐந்து நிமிடங்களாகும்.

www.lkedu.lk

வாணி கல்வியகம்



- ஒன்பது கடந்து ஐம்பத்தைந்து நிமிடங்களாகும்.

www.lkedu.lk

வாணி கல்வியகம்

5



- பத்து மணிக்கு ஐந்து நிமிடங்களாகும்.

www.lkedu.lk

வாணி கல்வியகம்



நள்ளிரவு 12



நண்பகல் 12

நள்ளிரவு 12 இற்கும் நண்பகல் 12 இற்கும் இடைப் பட்ட காலம் முற்பகல் எனப்படும். இது மு.ப. எனச் சுருக்கமாகக் காட்டப்படும்.

அதிகாலை 12.00 நண்பகல் 12.00

12.00 - 12.00

www.lkedu.lk

வாணி கல்வியகம்

S.Sarathbabu (Dip.in.teach) 077-1455654



நண்பகல் 12



நள்ளிரவு 12

நண்பகல் 12 இற்கும் நள்ளிரவு 12 இற்கும் இடைப்பட்ட காலம் பிற்பகல் எனப்படும். இது பி.ப. எனச் சுருக்கமாகக் காட்டப்படும்.

நண்பகல் 12.00 12.00 நள்ளிரவு

12.00 - 12.00

www.lkedu.lk

வாணி கல்வியகம்

(1) ஒரு வங்கியில் கொடுக்கல் வாங்கல்கள் மாலை 3.00 இற்கு முடிவடையும்.

(2) வைத்தியப் பரிசோதனை முகாம் காலை 9.00 இற்கு ஆரம்பமாகும்.

(3) மிருகக்காட்சிச்சாலையைப் பார்வையிடுவது மாலை 5.00 இற்கு முடிவடையும்.

(4) காலியில் இருந்து புறப்படும் அலுவலகப் புகையிரதம் காலை 7.45 இற்குக் கொழும்புக் கோட்டைப் புகையிரத நிலையத்தை வந்து அடையும்.

www.lkedu.lk
வாணி கல்வியகம்
S.Sarathbabu (Dip.in.teach) 077-1455654

24 கடிகாரத்தில் நேரத்தை வாசிப்போம்

www.lkedu.lk

வாணி கல்வியகம்

S.Sarathbabu (Dip.in.teach) 077-1455654



பாடசாலை மு.ப. 7.30 இற்கு ஆரம்பிக்கின்றது. இந்நேரம் 24 மணித்தியாலக் கடிகாரத்தில் 07:30 என எழுதப்படும்.

www.kalvi.lk

வாணி கல்வியகம்



பாடசாலை பி.ப 1.30 இற்கு முடிவடைகின்றது. இந்நேரம் 24 மணித்தியாலக் கடிகாரத்தில் 13:30 என எழுதப்படும்.

12 மணித்தியாலக் கடிகாரத்தின் நேரத்தை 24 மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டும்போது பிற்பகல் நேரங்களுக்கு 12 மணித்தியாலம் கூட்டப்படும்.

www.ikalvi.lk

வாணி கல்வியகம்

கடிகாரத்தி எழுதும் போது

- முற்பகலை குறிக்கும் நேரம் மாற்றமின்றி 24 கடிகார நேரத்தில் குறிக்கலாம்

- உதாரணம்-

மு.ப 7. 25	-	7. 25

www.lkedu.lk

வாணி கல்வியகம்

கடிகாரத்தி எழுதும் போது

- பிற்பகல் குறிக்கும் நேரம் 24 கடிகார நேரத்தில் மாற்றி அமையும்
- உதாரணம்-

பி.ப 7. 25 - 19. 25

www.lkedu.lk

வாணி கல்வியகம்

12 மணித்தியாலக் கடிகாரத்தின் நேரத்தை 24 மணித்தியாலக் கடிகார நேரத்தில் எழுதுக.

12 மணித்தியாலக் கடிகார நேரம்	24 மணித்தியாலக் கடிகார நேரம்
மு.ப. 10.45	10:45
பி.ப. 9.40	21:40
மு.ப. 4.15	.....
மு.ப. 11.00	.....
பி.ப. 3.20	.....
பி.ப. 10.00	.....

www.lkedu.lk
வாணி கல்வியகம்
S.Sarathbabu (Dip.in.teach) 077-1455654

24 மணித்தியாலக் கடிகாரத்தின் நேரத்தை 12 மணித்தியாலக் கடிகார நேரத்தில் எழுதுக.

24 மணித்தியாலக் கடிகார நேரம்	12 மணித்தியாலக் கடிகார நேரம்
07:55	மு.ப. 7.55
18:00	பி.ப. 6.00
02:20	.....
11:10	.....
16:45	.....
23:05	.....

www.ikedu.lk

வாணி கல்வியகம்

நேரம் 02



www.ikdu.lk

வாணி கல்வியகம்

S.Sarathbabu (Dip.in.teach) 077-1455654

உதாரணம் 1

ஒரு பேருந்து மு.ப. 3.45 இற்குக் குருணாகலிலிருந்து புறப்பட்டு மு.ப. 8.00 இற்குக் கொழும்புக் கோட்டையில் பயணத்தை முடித்துக் கொண்டது. பயணத்துக்காகச் செலவிடப்பட்ட நேரம் எவ்வளவு?



புறப்பட்ட நேரம்



முடித்த நேரம்

பயணத்தை முடித்த நேரம் = மு.ப. 8.00

பயணத்தை ஆரம்பித்த நேரம் = மு.ப. 3.45

www.lkedu.lk

வாணி கல்வியகம்

S.Sarathbabu (Dip.in.teach) 077-1455654

மணி	நிமிடம்
7 ~~8~~	00
− 3	45
4	15

- ஒரு மணித்தியாலம் நிமிட நிரலுக்குக் கொண்டு செல்லப் பட்டது. அப்போது நிமிட நிரலில் 60 உம் மணித்தியால நிரலில் 7 உம் ஆகும்.
- இனி, 60 நிமிடங்களிலிருந்து 45 நிமிடங்களைக் கழிக்கும் போது 15 நிமிடங்கள் பெறப்படும்.
- 7 மணித்தியாலங்களில் 3 மணித்தியாலங்களைக் கழிக்கும் போது 4 மணித்தியாலங்கள் பெறப்படும்.

www.ikedu.lk
வாணி கல்வியகம்

நேரம் மு.ப உடன் மு.ப கழித்தல்

நேரம் மு.ப உடன் பி.ப கழித்தல் (24 மணித்தியால கடிகார நேரத்திற்கு மாற்ற வேண்டும்)

நேரங்களை கூட்டல்

www.lkedu.lk

வாணி கல்வியகம்

S.Sarathbabu (Dip.in.teach) 077-1455654

(1) அப்பா மு.ப. 6.45 இற்கு வீட்டிலிருந்து புறப்பட்டு மு.ப. 8.15 இற்கு அலுவலகத்தை அடைந்தார். அப்பா அலுவலகத்துக்குச் செல்வதற்குச் செலவிட்ட நேரத்தைக் காண்க.

அலுவலகத்தை அடைந்த நேரம் - மு.ப 8.15

வீட்டிலிருந்து புறப்பட்ட நேரம் - மு.ப 6.45



www.lkedu.lk

வாணி கல்வியகம்

உதாரணம் 2

அம்மா மு.ப. 11.30 இற்குப் பகல் உணவைச் சமைக்கத் தொடங்கினார். அவர் பி.ப. 1.10 இற்கு உணவு சமைப்பதை நிறைவு செய்தார். உணவு சமைப்பதற்குச் செலவிடப்பட்ட நேரம் எவ்வளவு?

உணவு சமைப்பதை நிறைவு செய்த நேரம் - பி.ப 1.10

உணவு சமைக்க தொடங்கிய நேரம் - மு.ப 11.30

www.ikedu.lk

வாணி கல்வியகம்

இங்கு தொடங்கிய நேரம் முற்பகலும் நிறைவு செய்த நேரம் பிற்பகலும் ஆகும். எனவே இரண்டு நேரங்களுக்குமிடையிலான வித்தியாசத்தைக் காண்பதற்கு முதலில் அவற்றை 24 மணித்தியாலக் கடிகாரத்துக்கேற்ப எழுதிக்கொள்வோம்.

உணவைச் சமைக்கத் தொடங்கிய நேரம் = மு.ப. 11.30
= 11:30

உணவு சமைப்பதை நிறைவு செய்த நேரம் = பி.ப. 1.10
= 13:10

www.lkedu.lk

வாணி கல்வியகம்



உணவைச் சமைப்பதற்குச் செலவிடப்பட்ட நேரம் 1 மணித்தியாலமும் 40 நிமிடங்களும் ஆகும்.

www.lkedu.lk

வாணி கல்வியகம்

(1) மு.ப. 7.30 இற்குப் பாடசாலை ஆரம்பமாகிப் பி.ப. 1.30 இற்கு முடிவடைந்ததாயின், பாடசாலை நடத்தப்பட்ட நேரம் எவ்வளவு?

பாடசாலை முடிவடைந்த நேரம் - பி.ப 1.30

13 : 30

பாடசாலை ஆரம்பித்த நேரம் - மு.ப 7.30

	மணி	நிமிடம்
	13	30
—	7	30
	6	00

www.lkedu.lk

வாணி கல்வியகம்

(4) ஒரு சுற்றாடற் பாசறை மு.ப. 9.30 இற்கு ஆரம்பமாகிப் பி.ப. 2.10 இற்கு முடிவடைந்தது. அது நடத்தப்பட்ட நேரம் எவ்வளவு?

பாசறை முடிவடைந்த நேரம் - பி.ப 2.10

14 : 10

பாசறை ஆரம்பித்த நேரம் - மு.ப 9.30



www.lkedu.lk

வாணி கல்வியகம்

உதாரணம் 1

மு.ப. 4.20 இற்குப் படிக்கத் தொடங்கிய அண்ணா 2 மணித்தியாலங்கள் 50 நிமிடங்களின் பின்னர் படிப்பை நிறுத்தினார். படிப்பை நிறுத்திய நேரம் யாது?

படிக்கத் தொடங்கிய நேரம்	=	மு.ப. 4.20
செலவு செய்த நேரம்	=	2 மணித்தியாலங்கள் 50 நிமிடங்கள்

மணி	நிமிடம்
4	20
+ 2	50
6	70
	60
7	10

www.lkedu.lk

வாணி கல்வியகம்

S.Sarathbabu (Dip.in.teach) 077-1455654

(1) ஆரம்பப் பிரிவின் சிறுவர் சந்தை மு.ப. 8.15 இற்கு ஆரம்பமாகி 3 மணித்தியாலங்கள் 30 நிமிடங்களின் பின்னர் முடிவடைந்தது. சிறுவர் சந்தை முடிவடைந்த நேரம் யாது?

மணி	நிமிடம்
8	15
+ 3	30
11	45


www.lkedu.lk

வாணி கல்வியகம்

உதாரணம் 2

இரத்மலானை விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட ஒரு விமானம் 26 நிமிடங்களின் பின்னர் மு.ப. 9.16 இற்குப் பலாலி விமான நிலையத்தை அடைந்தது. விமானம் பயணத்தைத் தொடங்கிய நேரம் யாது?

பயணத்தை முடித்த நேரம்	=	மு.ப. 9.16
செலவழித்த நேரம்	=	26 நிமிடங்கள்



www.lkedu.lk

(1) துளசி ஒரு புத்தகத்தை வாசிப்பதற்கு 2 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள் எடுத்தாள். அவள் அப்புத்தகத்தை பி.ப. 3.45 இற்கு வாசித்து முடித்தாள். துளசி அப்புத்தகத்தை வாசிக்கத் தொடங்கிய நேரம் யாது?

	மணி	நிமிடம்
	15	45
—	2	30
	13	15

வாசிக்க தொடங்கிய நேரம் பி.ப 1.15

www.lkedu.lk

வாணி கல்வியகம்

1 பிரசினத்தைத் தீர்க்க.

(1) அப்பா மு.ப. 6.45 இற்கு வீட்டிலிருந்து புறப்பட்டு மு.ப. 8.15 இற்கு அலுவலகத்தை அடைந்தார். அப்பா அலுவலகத்துக்குச் செல்வதற்குச் செலவிட்ட நேரத்தைக் காண்க.

(2) அக்கா பி.ப. 2.45 இற்கு ஒரு சட்டையைத் தைக்கத் தொடங்கிப் பி.ப. 5.30 இற்கு அதனைத் தைத்து முடித்தார். அவர் அதனைத் தைத்து முடிப்பதற்கு எடுத்த நேரம் யாது?

(3) அலுவலகப் புகையிரதம் மு.ப. 4.50 இற்கு மகோப் புகையிரத நிலையத்திலிருந்து அதன் பயணத்தை ஆரம்பித்து மு.ப. 8.35 இற்குக் கொழும்புக் கோட்டையை வந்தடைந்தது. அதன் பயணத் திற்கு எடுத்த நேரம் யாது?

www.ikedu.lk
வாணி கல்வியகம்
S.Sarathbabu (Dip.in.teach) 077-1455654

2 பிரசினத்தைத் தீர்க்க.

(1) மு.ப. 7.30 இற்குப் பாடசாலை ஆரம்பமாகிப் பி.ப. 1.30 இற்கு முடிவடைந்ததாயின், பாடசாலை நடத்தப்பட்ட நேரம் எவ்வளவு?

(2) ஒரு விளையாட்டுக் குழுவினர் மு.ப. 8.35 இற்குத் தமது பயிற்சியைத் தொடங்கினர். அவர்கள் பி.ப. 2.15 இற்குப் பயிற்சியை முடித்தனர். பயிற்சி நடவடிக்கைகளுக்காக அவர்கள் செலவிட்ட நேரத்தைக் காண்க.

(3) ஒரு வயலில் மு.ப. 8.45 இற்குத் தொடங்கிய நெல் அறுவடை பி.ப. 4.30 இற்கு முடிவடைந்தது. நெல் அறுவடைக்காகச் செலவிடப்பட்ட நேரத்தைக் காண்க.

(4) ஒரு சுற்றாடற் பாசறை மு.ப. 9.30 இற்கு ஆரம்பமாகிப் பி.ப. 2.10 இற்கு முடிவடைந்தது. அது நடத்தப்பட்ட நேரம் எவ்வளவு?

www.lkedu.lk
வாணி கல்வியகம்
S.Sarathbabu (Dip.in.teach) 077-1455654

3 பிரசினங்களைத் தீர்க்க.

(1) ஆரம்பப் பிரிவின் சிறுவர் சந்தை மு.ப. 8.15 இற்கு ஆரம்பமாகி 3 மணித்தியாலங்கள் 30 நிமிடங்களின் பின்னர் முடிவடைந்தது. சிறுவர் சந்தை முடிவடைந்த நேரம் யாது?

(2) பாடசாலையில் ஒரு நாடகக் காட்சி மு.ப. 9.35 இற்குத் தொடங்கி 2 மணித்தியாலங்கள் 45 நிமிடங்களில் முடிவடைந்தது. நாடகக் காட்சி முடிவடைந்த நேரம் யாது?

(3) பி.ப. 5.32 இற்குத் தொடங்கிய மழை 3 மணித்தியாலங்கள் 45 நிமிடங்களின் பின்னர் ஓய்ந்தது. மழை ஓய்ந்த நேரம் யாது?

www.ikeau.lk
வாணி கல்வியகம்
S.Sarathbabu (Dip.in.teach) 077-1455654

(1) துளசி ஒரு புத்தகத்தை வாசிப்பதற்கு 2 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள் எடுத்தாள். அவள் அப்புத்தகத்தை பி.ப. 3.45 இற்கு வாசித்து முடித்தாள். துளசி அப்புத்தகத்தை வாசிக்கத் தொடங்கிய நேரம் யாது?

(2) துவிச்சக்கர வண்டிப் போட்டியாளர் ஒருவர் 4 மணித்தியாலங்கள் 15 நிமிடங்கள் பயிற்சி செய்த பின்னர் மு.ப. 10.30 இற்குப் பயிற்சியை முடித்தார். அவர் பயிற்சியை ஆரம்பித்த நேரம் யாது?

(3) ஆரம்பப் பிரிவின் விளையாட்டுப் போட்டி பி.ப. 1.30 இற்கு முடிவுற்றது. விளையாட்டுப் போட்டி 5 மணித்தியாலங்கள் நடைபெற்றது. விளையாட்டுப்போட்டி ஆரம்பித்த நேரம் யாது?

www.lkedu.lk

வாணி கல்வியகம்